
# e - thaksalawa (கல்விக்கூடம்)

## க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

## Tamil Language and literature

## தமிழ்மொழியும் இலக்கியமும்

The National e-learning Portal for The General Education



# தமிழ்மொழியும் இலக்கியமும் - I,II

நேரம் : மூன்று மணித்தியாலங்கள்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I

**கவனிக்க : -**

- எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட வட்டங்களில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "அணிதேர் புரவி ஆட்பெரும்" - இங்கு **புரவி** என்பது

   1. யானை 2 தேர் 3. குதிரை 4. படை

2. 'நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்' - இங்கு **செந்நெல்** என்பது

   1. நெல் 2. கரும்பு 3. சோளம் 4. வாழை

3. 'மதியினிற் புலை நாத்திகங் கூறுவர்' - இங்கு **நாத்திகம்** என்பதன் எதிர்க்கருத்துச்சொல்

   1. ஆத்திகம் 2. வேதிகம் 3. மானசிகம் 4. வயோதிபம்

4. 'வாதத்துகென்று வந்திருந்தவர்களில்' - இங்கு **வாதம்** என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்

   1. சண்டை 2. சமாதானம் 3. பிரதிவாதம் 4. பிரச்சனை

5. 'நாரியர் பால் என்னிலைமை நவில்வாய்' - இங்கு **நாரியர்** எனச் சுட்டப்படுவோர்.

   1. பெண்கள் 2. ஆண்கள் 3. சிறுவர்கள் 4. வயோதிபர்கள்

6. ஒத்தகருத்துச் சொற்களின் இணைப்பு

   1. அம்பு – வில் 2. மங்குதல் - ஒளிர்தல்
   3. மூப்பு - இளமை 4. சத்தம் - ஓசை

7. ‘பரீட்சை Evaluation’ (இவாலுவேசன்) முடிந்து விட்டது இங்கு **இவாலுவேசன்** என்பது.

1. மதிப்பீடு 2. கணிப்பீடு 3. பகுப்பாய்வு 4. புள்ளிவிபரம்

8. **கலி, களி, கழி** என்பன முறையே குறிக்கும்

1. நீக்குதல், துன்பம், மகிழ்ச்சி
2. மகிழ்ச்சி, நீக்குதல், துன்பம்
3. துன்பம், மகிழ்ச்சி, நீக்குதல்
4. துன்பம், நீக்குதல், மகிழ்ச்சி

9. **பாட்டு, குரங்கு** என்னும் பொருளைக்குறிக்கும் ஒருசொல்

1. பாடகன் 2. வானரம் 3. கவி 4. கவிதை

10. ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல **கப்பல் செலுத்துபவன்**

1. பாகன் 2. மீகாமன் 3. சாரதி 4. வலவன்

11. **ஒருவருக்கே தனியுரிமை உடையது** என்பதை எடுத்துக்காட்டும் அருஞ் சொற்றொடர்.

1. ஏகபோகம் 2. ஏகாதிபத்தியம் 3. ஏகமனம் 4. ஒய்யாரம்

12. **‘அடிநகர்தல்’** எனும் மரபுத்தொடரின் பொருள்

1. அடித்தல் 2. தோண்டுதல் 3. இடம்பெயர்தல் 4. கிண்டுதல்

13. **‘அணியடுக்கு’** என்பது

1. இணைமொழி 2. அடுக்குத்தொடர் 3. அடுக்கிடுக்கிடுக்குத் தொடர் 4 . உவமைத்தொகை

14. ஒரு தண்டிலே பல மரங்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து

1. செண்டு 2. கொத்து 3. கூடை 4. மஞ்சரி

15. ‘ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன்’ என்ற பழமொழியின் கருத்து.

1. ஆயிரம் நபர்களைக் கொலை செய்தவன்
2. அனுபவ அறிவின் சிறப்பு
3. கருமமே கண்ணாக இருப்பவன்
4. எங்கும் எதிலும் நன்மை தீமை உண்டு

16. ‘எதனையும் சிறிதென எண்ணாதே’ என்ற கருத்தைத் தரும் பழமொழி.

1. சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்
2. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
3. கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு
4. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்

17. “கைராசிக்காரி நீங்கள் தான் மாமி. என்ர தலப்புள்ளைய ஏந்தனும்”. **கைராசி** என்பதன் பொருள்.

1. கைநீளம் 2. அதிஸ்டம் 3. ராசிபலன் 4. கைநீட்டுதல்

18. பின்வருவனவற்றுள் **அடுக்குத் தொடராக** அமைவது.

1. ஓடியோடி 2. கன்னங்கரிய 3. கிடுகிடு 4. அந்திசந்தி

19. (அ) . விமலன் நன்றாகப் படித்தவன்தான்

(ஆ). பொருத்தமான தொழில் கிடைக்கவில்லை.

மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1. ஆனால் 2. ஆகவே 3. ஆனாலும் 4. அதனால்

20. ''எமது பாடசாலையில் பழைய பொருட்கள் ஏலம் போடப்பட்டது'' **ஏலம்** என்பது.

1. பாரசீகமொழிச்சொல் 2. பிரான்சியமொழிச்சொல்

3. போர்த்துக்கேய மொழிச்சொல் 4. ஆங்கிலமொழிச்சொல்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்க.**

21. 'தலையெல்லாம் வலிக்கிறது' என்பது

1. திணைவழு 2. காலவழு 3. எண்வழு 4. இடவழு

22. 'அப்பா என்னை அன்புடன் வழிநடத்துகிறார். அவரை என்றும் மறவேன்''. இதில் வந்துள்ள மாற்றுப்பெயர்.

1. அப்பா 2. அவர் 3. என்னை 4. அன்புடன்

23. 'ஆசிரியர் மாணவர்களிற்கு வழி காட்டினார்''. - இங்கு **வழி** என்பது.

1. எழுவாய் 2. பயனிலை 3. செயற்படுபொருள் 4. அடைமொழி

24. 'மந்தி சிந்தும் கனிகளிற்கு வான்கவிகள் கெஞ்சும்' இங்கு இடம் பெற்றுள்ள அணி.

1. உவமையணி 2. உருவகணி 3. உயர்வுநவிற்சியணி 4. தற்குறிப்பேற்றணி

25. 'அம்மா சுடுசோறு பரிமாறினாள்' இங்கு **சுடுசோறு** என்பது

1 வினைத்தொகை 2. பண்புத்தொகை 3. வேற்றுமைத்தொகை 4. உவமைத்தொகை

26. 'மோனாலிசா ஓவியம் மிகவும் அழகானது' இங்கு **மிகவும்** என்பது.

1. பெயரடை 2. பெயரெச்சம் 3. வினையடை 4. வினையெச்சம்

27. பின்வருவனவற்றுள் பின்னொட்டு ஏற்று வந்துள்ள சொல்.

1. அவமானம் 2. அநீதி 3 தற்பெருமை 4. புத்திசாலி

28. 'உழவர் முன்றில் தோறும்' இங்கு **முன்றில்** என்பது

1. இலக்கணமுடையது 2. இலக்கணப்போலி
3. மரூஉ 4. எழுத்துப்போலி

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.**

29. (1). பெயர்ச்சொல் :- புத்தகம், கொப்பி, பேனை

(2). வினைச்சொல் :- பேசு, நட, சிரி

(3). இடைச்சொல் :- ஆனால், எனவே, ஆகவே

(4). உரிச்சொல் :- சால, போல, உறு

30. (1). கூட்டுப்பெயர் :- நீரேரி, தொலைக்காட்சி, சந்தர்ப்பவாதி

(2). ஆக்கப்பெயர்:- முதலாளி, மீன்காரன், மருத்துவம்

(3). வினையாலணையும் பெயர் :- ஓடியது, பணக்காரன், சிரித்தவனை

(4). தொழிற்பெயர் :- ஆடல், மேய்ந்தது, பாடினான்.

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

31. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து விடயங்களையும் ………………… இல் பிரசுரிக்கப்படும்.

1. சுற்றுநிருபம் 2. வெள்ளையறிக்கை 3. வர்த்தமானி 4. தகவல்கோவை

32. அத்தியவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக்குழு …………….. செய்தது.

1. பரிந்துரை 2. கட்டளை 3. கோரிக்கை 4. வேண்டுகோள்

33. தமிழர்கள் தமது பண்பாட்டுடன் ………………..பேணவேண்டும்.

1. கலைசாரம் 2. கலாச்சாரம் 3. கலாசாரம் 4. கலாட்சாரம்

34. நீ வருவாய் என்று தெரிவித்திருந்தால் நான் ………………………..

1. நின்றேன் 2. நின்றிருப்பேன் 3. நிற்பேன் 4. நில்வேன்

35. எமது பாடசாலையின் எண்பதாவது ஆண்டான ……………… அடுத்த மாதம் வரவுள்ளது.

1. வெள்ளிவிழா 2. மணிவிழா 3. பொன்விழா 4. அமுதவிழா

36. ஜனாதிபதித் தேர்தலுக்காக சுயேச்சைக்குழு கட்டிய ………………. பணத்தை இழந்தது.

1. சம்பளம் 2. கட்டுப்பணம் 3. கூலிப்பணம் 4. வாடகைப்பணம்

- **கீழே தரப்பட்டுள்ள பாடசாலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

ஒற்றை யடிப்பாதை - அதில்
ஊரிலுள் ளோர்பலர் போயறி யார்; அதன்
சுற்றுப் புறங்களிலே - வளர்
தூறுகள் செல்வதற் ஊறு விளைத்தன;
முற்றி முதிர் செடிகள் - கொடு
முட்களை நீட்டி என் பக்கம் முறைத்தன;
பற்றிப் படர்கொடிகள் - பெரும்
பாம்புகள் போற்பயம் மேம்படச் செய்தன.

37. இக்கவிதை உணர்த்தும் காட்சி

1. முட்பாதை 2. காட்டுப்பாதை 3. ஊர்ப்பாதை 4. காலைக்காட்சி

38. இங்கு இடம் பெற்றுள்ள அணி

1. உருவகணி 2. தற்குறிப்பேற்றணி 3. உயர்வு நவிற்சியணி 4. உவமையணி

39. ‘செல்வதற்கு ஊறு விளைத்தன’ இங்கு ஊறு என்பது.

1. துன்பம் 2. தடை 3. கொடுமை 4. அனுமதி

40. கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) அவன் மற்ற மாணவர்களைப் போல இருக்கவில்லை

(ஆ) சிறிது கவனம் கொண்டு அவனை உருவாக்கினேன்

(இ) கண்ணன் எனது வகுப்பிற்கு வந்தான். எனினும்,

(ஈ) எப்படியாவது அவனை மாற்ற எண்ணினேன்.

(உ) அதற்கு எனக்கு தக்க சன்மானம் கிடைத்தது.

1. அ, ஆ, இ, ஈ, ஊ
2. இ, அ, ஈ, ஆ, உ
3. இ, ஈ, உ, அ, ஆ
4. ஈ, ஆ, இ, அ, உ

(1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i). 'வெட்கத்தை விட்டுக் கூறுகிறான் கண்ணன்' இவ் வாக்கியத்தில் எழுவாய் யாது?

(ii). பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.

வள்ளுவர் அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாள் எனக் கூறினார்.

(iii). '.இந்த மீன் அந்தோனியால் பிடிக்கப்பட்டது' இதனை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(iv). 'கிழி' என்ற சொல் பெயராகவும், வினையாகவும் அமையும்படி ஒவ்வொரு வாக்கியம் அமைக்க.

(v) 'அன்போடு பேசினார்' இங்கு ''ஓடு'' உருபு உணர்த்தும் பொருள் யாது?

(vi). உறவுமுறைக்கடிதம், தொழில்முறைக்கடிதம் இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

(vii). விமலா தோட்டத்திற்கு சென்றாள்

விமலா பூக்கள் பறித்தாள்

விமலா சாமிக்கு பூ வைத்தாள்.

இம்மூன்று வாக்கியங்களையும் இணைத்து தனியொரு வாக்கியமாக எழுதுக.

(viii). 'அடிநகர்தல்' என்ற மரபுத் தொடர் குறிக்கும் பொருள் யாது?

(ix). 'நீரெ டுத்து வருதற் கவள்மணி' என்ற தொடரை சந்தி பிரித்து எழுது.

(x). விமலன் குணதிசை நோக்கி நடந்தான். இங்கு குணதிசை என்பது எத்திசை?

(2 x 10 = 20 புள்ளிகள்)

**2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமாகத் தலையங்கம் இடுக.**

(i) இன்று உலகமே பேசுகின்ற பேசுபொருளாக கொரோனா வைரஸ் அமைந்துள்ளது. அது எவ்வாறு தோன்றியது எவ்வாறு பரவலடைகின்றது என்பது தொடர்பாக அரசாங்கம் ஆய்வுகளை நடாத்தி வருவதானது ஒருபுறம் இருக்க, அதனை மேலும் பெருக விடாமலும் அதன் தாக்கத்தில் இருந்து எம்மையும் எமது நாட்டையும் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினது தலையாய கடமை ஆகும். நாம் எமது கடமையைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு விளக்கக்கட்டுரை.

(ii) இன்று நாட்டின் மூலை முடுக்கெல்லாம் காணப்படும் கட்டிடங்களாக அதிகளவில் காணப்படுவது சிறுவர் இல்லங்களே! இவ்வாறு இவர்கள் குடும்பத்திலிருந்தும், உறவுகளிடமிருந்தும் வீசப்பட்டு அநாதைகளாக பல்வேறு ஏக்கங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். என்னதான் சிறுவர் இல்லங்களில் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும் மனதார ஏக்கம் உடையவர்களாகவே வாழ்கின்றனர். எனவே இது தொடர்பாக சிறுவர்தினத்திற்கு உம்மால் ஆற்றக்கூடிய மேடைப் பேச்சு.

(iii). இன்று எமது நாட்டுக்கு இளைஞர், யுவதிகள், மேலைத்தேய நாகரிகத்தில் மூழ்கி விட்டனர். இதனால் எமது பாரம்பரிய பண்பாடு, கலாச்சாரம், என்பன சீரழியத் தொடங்கிவிட்டது. இத தொடருமானால் எதிர்காலத்தில் எமது நாட்டு மக்களின் வாழ்க்கையானது ஒர் ஆபத்தான நிலையினை அடைந்து விடும். எனவே மேலைத்தேய நாகரிகத்தைப் பின்பற்றுவதன் நன்மை, தீமை, பற்றி இருவருக்கிடையே இடம்பெறும் உரையாடல்.

(iv). விமலன் படிப்பில் கெட்டிக்காரன். இருந்தாலும் வீட்டில் தன்னுடைய தந்தையின் நச்சரிப்பும், கண்டிப்பும் அவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணும். எப்படியாவது கிராமத்துப் பள்ளிப் படிப்பை முடித்து பட்டிணத்து பள்ளிக்கு போய்விட்டால் தந்தையின் நச்சரிப்பிலிருந்து தப்பி விடலாம் என்று எண்ணியவனுக்கு அவனது ஆசை வீண்போகவே இல்லை. அதன்படி அடுத்த வருடமே க.பொ.த சாதாரன தரத்தில் சித்தியடைந்து உயர்தரத்திற்கு நகரப் பாடசாலைக்கு சென்றான். அங்கு அவன் நண்பர்களைக் கண்டான் அவர்களுடன் பழகினான் அவனுடைய வாழ்க்கை ஓருசில ஆண்டுகளில் மாறத் தொடங்கியது. இதனைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதை ஒன்று வரைக.

(25 புள்ளிகள்)

3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக?

(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்)

கல்வி நமக்குப் பல நன்மைகளைத் தருகின்றன. கல்வியினால் நம் அறிவு வளர்கிறது, கல்வியால் நாம் தொழில் பெறுகின்றோம். கற்றவர்களை உலகம் மதிக்கிறது. எல்லாவற்றிலும் மேலாகக் கல்வியானது நமக்கு கடவுள் உண்மையை அறிவுறுத்தி, நாம் கடவுளை அடையத் துணை செய்கிறது கடவுளை வணங்கத்துணை செய்யாத கல்வி கல்வியாகாது.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅள்எனின்" என்பர் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குணவிசேடங்களையும் அவரை அன்பு செய்யும் முறைகளையும் அதனால் அவற்றை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகின்றோம். அவ்வாறு அறிவதால் நமக்கு கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது. அன்பு கடவுள் பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது. கடவுட் கொள்கை இல்லாதவர்கள் கல்வியினால் கடவுள் நம்பிக்கையைப் பெறுகின்றவர் கடவுள் கொள்கை உடையவர்கள் கல்வியினால் சமய வாழ்வில் ஊக்கம் அடைகின்றார்கள்.

கல்வியைப் போலவே கடவுள் கொள்கையைப் பெறுவதற்கு இளமைப்பருவம் அற்ப காலமாகும் இளமையில் பழகிய பழக்கங்கள் எதிர்காலத்திலும் நிலைத்து நிற்கும் " தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" ஆதலினால், நமது பழக்க வழக்கங்களை சிறுவயதிலேயே திருந்தியவனாகக் கற்றுக்கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையும் கடவுள் முதன்மையையும் இளமையிலேயே போதித்தல் ஒருவரது வாழ்க்கை சிறந்து நிற்கும்.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒருவர் எதில் திறன் பெற்றவரோ அதனைத் தேர்வு செய்து கொள்ளுவதற்கு இங்கே அனுமதியில்லை. தம் பிள்ளைகள் ஒவ்வொருவரும் மருத்துவர்களாக வேண்டும் என்னும் கனவில்லாத பெற்றோர் யாரேனும் இருக்கிறார்களாக? ஓவியம் தீட்டத் தெரிந்த குழந்தையை ஓவியப் பயிற்சி பெற, விளையாட்டுத்திறன் இவற்றைப் பற்றி யோசிக்காமல் தம் விருப்பங்களைக் குழந்தையின் மீது திணிக்கும் பொதுப்புத்திக்கு எதிராக, ஒவ்வொருவரின் ஆர்வத்தையும் திறனையும் அங்கீகரித்துப் போற்றும் தொடர் இது. மற்றவர்களோடு ஒப்பீட்டு தாழ்வுணச்சி கொண்டு தவிக்கும் மனதுக்கு ' உனக்கு எளிதாகக் கைவருவது ஒன்றுண்டு" எனத் துணிவு கொடுக்கும் தொடர் எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது"

1. இவ்வுரைப் பகுதியின் பிரதான அம்சம் யாது?
2. பெற்றோரின் விருப்பம் எது?
3. பெற்றோர் தொடர்பாக ஆசிரியரின் குற்றச்சாட்டு யாது?
4. தாழ்வுணர்ச்சி கொண்ட மனதுக்கு எதனைச் செய்யும்படி ஆசிரியர் கூறுகின்றார்.?
5. குழந்தைகள் தொடர்பில் பெற்றோரின் அக்கறை எவ்வாறு அமைய வேண்டும்.?

(2 x 5 = 10 புள்ளிகள்)

5. அண்மையில் ஏற்பட்ட வரட்சி காரணமாக உமது கிராமம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் பெரும் வறுமை நிலையினை அடைந்துள்ளனர். இது தொடர்பாக குறித்த ஆமைச்சிற்கு 100 சொற்களில் அமையுமாறு கடிதம் ஒன்று வரைக.

அல்லது

இன்று எமது நாட்டின் இளம்பராயத்தினர் தம் வாழ்வின் அர்த்தத்தையே புரியாதவர்களாக, எதிர்கால சிந்தனை இல்லாதவர்களாக போதைப் பொருட்களின் மீது நாட்டம் கொண்டு அதன் பால் செல்லுகின்றனர். அவர்களை தடுத்து நிறுத்தும் பொருட்டும், விளிப்புணர்வை ஊட்டும் பொருட்டும் துண்டுப் பிரசுரம் ஒன்று வரைக. (100 சொற்களில் அமைதல் வேண்டும்.

## பகுதி - III

* **அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
* **1, 2, 3, 4 ஆகிய வினாக்களிற்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
* **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

1. **சுருக்கமான விடை தருக.**

(i). “ பொழிந்த நெய் யாகுதிவாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தார்”

(அ) இங்கு எழுந்தவர் யார்?

(ஆ) இங்கு இடம் பெற்ற அணியாது?

(ii) “சீரெடுத்த புலையுயிர்ச் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல்”

(அ) புலையுயிர்ச் சாரர்கள் எனப்படுபவர் யார்?

(ஆ) தேச பக்தர் எனப்படுபவர் யார்?

(iii). “ கொங்கர்க் கமரர் பதியளித்த
கோவே ! இராச குலதிலகா !”

(அ) இங்கு குறிப்பிடப்படும் நாடு எது?

(ஆ) இராசகுலதிலகா ! எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

(iv). “புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்”

(அ) நதியின் செயற்பாடுகள் எவை?

(ஆ) இங்கு குறிப்பிடப்படும் விளையாட்டுகள் எவை?

(v) ‘‘மாமிமகளே என்ர மருதங்கிளி வங்கிசமே
ஏலங்கிராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்’’

(அ) பரம்பரையைக் குறிக்கும் சொல் எது?

(ஆ) மாமி மகளை எவ்வாறெல்லாம் விளிக்கிறான்.?

(vi) ‘‘கொற்றத்தார்க் குரிசில் இவர் ஆர்? என்று
குகன் வினவ கோக்கள் வைகும்’’

(அ) இங்கு குரிசில் என்பது யாரை?

(ஆ) கோக்கள் என்பதன் பொருள் யாது?

(vii) ‘‘கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்’’

(அ) கழாஅக்கால் என்பதன் பொருள் யாது,

(ஆ) சான்றோர் எனப்படுவோர் யார்?

(viii). ‘‘தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி’’

(அ) தண்கயம் என்பது யாது?

(ஆ) தழீஇ என்பது யாது?

(ix). ‘‘உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்’’

(அ) இங்கு உயிருடன் சென்ற ஒருமகள் யார்?

(ஆ) செயிருடன் வந்த சேயிழை யார்?

(x). ‘‘உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்’’

(அ) இங்கு சந்துபட என்பது யாது?

(ஆ) அறத்தின் உருவம் எனக் குறிப்பிடுபவர் யார்?

(20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i). யானை அனையவர் நண்புஒரீஇ நாய் அனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்து அறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்தவேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்.

(அ) யாருடைய நட்பை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதை விளக்குக.?

(ஆ) எப்படிப்பட்டவர்களின் நட்பைத் தழுவிக் கொள்ள வேண்டும் என்பதை விளக்குக.?

(ii). கண்ணைமறைத் தேகொடுபோய்க் காட்டில் விடும் பூஜையைபோற்
பெண்ணை மனையடைத்துப் பின்னொருவர் கைக்கொடுப்பர்
கண்ணான்முன் கண்டுமிலர் காதலர்சொற் கேட்டுமிலர்
எண்ணாது மெண்ணி யிருந்தயர்வர் மங்கையர்கள்
இக்கொடுமைக் கியாதுசெய்வ திசையாய் பசுங்கிளியே !

(அ) இங்கு இடம்பெற்றுள்ள உவமையின் பொருத்தப்பாட்டை விளக்குக?

(ஆ) பெண் தொடர்பான காதலனின் வருத்தத்தை விளக்குக.?

(iii). நீ தூது நடந்தருளி எமது நினைவு
அவர்க்கு உரைத்தால் நினைவின் வண்ணம்
தாது ஊதி அணி முரலும் தண்பதியும்
தாயமும் தான் தாரன் ஆகில்
மீது ஊதுவளைக் குலமும் வலம் புரியும்
மிக முழங்க வெய்ய காலன்
மாதூதர் மனம் களிக்கப் பொருது எனினும்
பெறுவன் இது வசையும் அன்றே.

(அ). அஸ்தினாபுரத்தின் சிறப்பினை விளக்குக.?

(ஆ). தருமனின் கோபம் வெளிப்படும் விதம் பற்றி எடுத்துரைக்குக.

(iv). கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு - வாள் - தண்டு - சக்கரம் - இவற்றிற்கு மேலே தெய்வப்படைகளிலும் கைவைக்கிற சமயம் அந்தச்சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலுங் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள் வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள். நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்து பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக் கொண்டு போய் வைத்து விட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய் விட்டது. விஸ்வநாதப்பிள்ளையும் நிலைதளர்ந்து போனார். அவருடைய பார்வை நாவலர் அவர்கள் முகத்தில் விழுந்தது. சனங்களும் அங்கேதான் பார்க்கிறார்கள்.

(அ) வாதம் நடைபெறும் விதத்தை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கிறார்?

(ஆ) இராமநாதன் பற்றியும், அவருடைய கட்சி பற்றியும் ஆசிரியரின் எண்ணப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது?

(v). பிறநாடுகளிலிருந்து வந்த சமயக் குரவர் தமிழ்ப் பண்பாட்டைக் கடைப்பிடித்து இக்கண்ணோட்டத்துடன் தமிழர் மரபின்படியே இலக்கியங்களையும், இலக்கணங்களையும் யாத்தார்கள், வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர், போப்பையர் போன்றவர்கள் இம்மன நிலையையைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள். தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறி வருகின்றேன். ஏனெனில் தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும், ஆழத்திலும், பரப்பிலும், இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன். பரிபாடல் முதலாக, இராமலிங்கசுவாமிகளும், விபுலானந்த அடிகளும், ஈறாக பக்திப் பாடல்களைப் பாடிய புலவர்கள் எண்ணிறைந்தவர்கள்.

(அ) பிறநாட்டவர் தமிழால் கவரப்பட்டனர் என்பது எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது?

(ஆ) தமிழிலுள்ள பக்தி இலக்கியத்தின் சிறப்பினை விளக்குக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

3. பாரதியார் என்ற சுயசரிதை என்ற பகுதியில்

(அ) தாம் விரும்பியவற்றை அடைய முடியாதவரின் இயல்புகள்.

(ஆ) விரும்பியவற்றை அடைவதற்கான வழிகள் என்பவற்றை விளக்குக.

அல்லது

எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்

(அ) சினிமா நாடகத்திற்கு அடிமைப்பட்டு கிடக்கிறது என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள்.

(ஆ) நல்ல சினிமா என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் என்பவற்றை விளக்குக.?

4. சங்கப்பாடல் பகுதியினூடாக,

(அ) தலைவியின் வளையல் இறுகி இருப்பதற்கான காரணங்கள்.

(ஆ) இளமைக்கால நினைவுகள் என்பன சித்தரிக்கப்படும் விதம்.

அல்லது

தற்காலக் கவிதையில்

(அ) தோட்டத் தொழிலாளர்களின் அவலநிலை

(ஆ) தொழிலாளர்கள் பற்றி கவிஞரின் கவலை என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

5. தனிப்பாடற் பகுதியில்

(அ) சோழமன்னனின் வீரம், நாட்டு வளம்

(ஆ) சீதக்காதியின் கொடைச்சிறப்பு எடுத்துரைக்கப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

6. மூத்தம்மா என்ற சிறுகதையில்

(அ) கிராமிய வாழ்வியற் கோலங்கள்

(ஆ) காசிமின் எதிர்பார்ப்பு சித்தரிக்கப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

7. அற்றைத்திங்கள் என்ற நாடகத்தில்

(அ) நாட்டுவளம்

(ஆ) தாலாட்டுப்பாடல் குறித்து நிற்கும் செய்தி என்பவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

# e - thaksalawa (கல்விக்கூடம்)


## க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

## Tamil Language and literature

## தமிழ்மொழியும் இலக்கியமும்

புள்ளித்திட்டம்

The National e-learning Portal for The General Education



## விடைகள்

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 11. | 1 | 21. | 3 | 31. | 3 |
| 2. | 2 | 12. | 3 | 22. | 2 | 32. | 1 |
| 3. | 1 | 13. | 1 | 23. | 1 | 33. | 3 |
| 4. | 3 | 14. | 4 | 24. | 3 | 34. | 2 |
| 5. | 1 | 15. | 2 | 25. | 1 | 35. | 4 |
| 6. | 4 | 16. | 4 | 26. | 3 | 36. | 2 |
| 7. | 1 | 17. | 2 | 27. | 4 | 37. | 2 |
| 8. | 3 | 18. | 2 | 28. | 2 | 38. | 4 |
| 9. | 3 | 19. | 3 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 3 | 40. | 2 |

### பகுதி - II

1. (i) கண்ணன்

(ii) வள்ளுவர் “அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்.” எனக் கூறினார்.

(iii). அந்தோனி இந்த மீனைப் பிடித்தான்.

(iv). பெயர் : புலவருக்குப் பொற்கிழி கிடைத்தது.

வினை : விமலா புத்தகத்தைக் கிழித்தாள்.

(v). அடைமொழிப் பொருள்

(vi). உள்முகவரி

விளிப்பு

தலைப்பு

முடிப்பு

(vii). விமலா தோட்டத்திற்குச் சென்று, பூக்களைப் பறித்து சாமிக்கு வைத்தாள்.

(viii). இடம் பெயர்தல்

(ix). நீர் + எடுத்து + வருதற்கு + அவள் + மணி

(x). கிழக்கு / கீழ்த்திசை

2. (i) தலைப்பு :- கொரோனாவின் சீற்றம் / கொரோனாவும் உலகும்.

- வைரசின் தாக்கம்
- அதிகமாகத் தாக்கத்திற்கு உள்ளாவோர்
- அதன் அறிகுறிகள்
- உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்
- இன்று அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகள்
- பாதிப்பிற்கான காரணங்கள்
- பாதிப்பிலிருந்து மீளுவதற்கான நடவடிக்கைகள்
- தவறும் பட்சத்தில் ஏற்படும் விளைவுகள்

(ii). ஏங்கும் சிறார்கள் / வீசப்பட்டோர் / அநாதைகள்

- குடும்பத் தகராறுகள்
- தவறான வாழ்க்கை முறைகள்
- நவீன நாகரிகப் போக்குகள்
- மனித நேயமற்ற சிந்தனைகள்
- தோல்விகளைக் கண்டு அஞ்சும் மனமுடையோர்
- பணம் சம்பாதிக்க சிலர் போடும் நாடகங்கள்

(iii). தலைப்பு :- நாகரிகமோகம் / விட்டில் பூச்சிகள் / எதிர்காலக் கனவு இன்றிய இளையோர்

- பெற்றோரின் கண்டிப்பு இன்றிய வளர்ப்பு
- குடும்பத்தில் புரிந்துணர்வு இன்மை
- பணம் சம்பாதிக்கும் ஆசை
- பொறுப்பற்ற வாழ்க்கை முறை
- போதைவஸ்து பாவனையில் மோகம்
- ஊடகங்களின் தாக்கம்

(iv) தலைப்பு :- சுதந்திரம் / பறிபோன வாழ்க்கை

- கூடாத சகவாசங்களுடன் சேருதல்
- சுதந்திரம் கிடைத்ததாக எண்ணுதல்
- படிப்பில் அக்கறை காட்டாமை
- குறுகிய வழியில் பணம் சம்பாதிக்க ஆசை கொள்ளுதல்
- தவறான பாதைகளை நாடுதல்
- வாழ்க்கையைப் பறிகொடுத்தல்

மறுதலையாக :-

தலைப்பு :- அருமை / வழிகாட்டி / விளைவு

- நல்ல நண்பர்களுடன் சேருதல்
- குடும்பச் சூழலை உணருதல்
- கல்வியில் அக்கறை காட்டுதல்
- நேர் வழியைத் தேடுதல்
- தந்தையின் அறிவுரைகளைக் கேட்டல் / உணருதல்
- வாழ்க்கையை வளமாக்குதல்

3. சுருக்கம் :-

- கல்வியின் ஊடான நன்மைகள்
- கற்றவர்களைத்தான் உலகம் மதிக்கிறது
- கல்வியினால் நாம் எதனையும் அடையலாம்
- கல்வியினால் கடவுளின் அன்பைப் பெறலாம்.
- இளம் வயதிலேயே கடவுள் நம்பிக்கையைப் போதித்தல்

4. (i). மருத்துவராக வேண்டும் என்பதுடன் தம் பிள்ளைகள் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவர்களாக சமூகத்தில் வலம் வர வேண்டும் என்பதே.

   (ii). தம் பிள்ளைகள் மருத்துவர்களாக வேண்டும்.

   (iii). குழந்தைகளின் ஆர்வம், திறன் என்பவற்றை மதிக்காமல் தம் விருப்பங்களை அவர்கள் மீது திணிப்பது.

   (iv). உனக்கு எளிதாகக் கைவருவது எதுவோ அதனைச் செய்யும்படி கூறுகிறார்.

   (v). குழந்தைகளின் விருப்பம், திறன் என்பவற்றை அறிந்து அவர்களிற்கு எளிதாக எதனைச் செய்ய முடியுமோ அதனையே செய்ய அனுமதிக்கும்படி கூறுகிறார்.

5. கடிதம் :-

தரப்பட்ட தரவுகளிற்கு ஏற்ப

முகவரி

உள்முகவரி

விளிப்பு

தலைப்பு என்பவற்றுடன்

உள்ளடக்கம் :-

- வரட்சியின் தன்மையும், தாக்கமும்
- கிராமத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நிலை
- தற்போதைய அவர்களின் நிலை.
- கிராம மக்களிற்குத் தற்போது தேவைப்படும் உதவி எவ்வாறானது

முடிப்பு

ஒப்பம்

துண்டுப்பிரசுரம் :-

கவர்ச்சிகரமான தலைப்பு

விளிப்பு

உள்ளடக்கம் : -

- இளைஞர்கள் மாறியிருக்கும் நிலை
- போதைப் பொருள் பாவனையின் தீமை
- புலன்களை வேறு திசையில் தூண்டுதல்
- போதைப் பொருள் பாவனைளில்லாத வாழ்வின் சிறப்பு

வெளியிடுவோர் விபரம்

வெளியிடும் திகதி

## பகுதி - III

1. (i). (அ). நாவலர்

(ஆ). உவமையணி

(ii). (அ). உயிரைக் கொல்லும் படை வீரர்கள்

(ஆ). தேசத்தின் மீது பற்றுக் கொண்டவர்கள்

(iii) (அ) கொங்கு நாடு

(ஆ). 2ம்குலோத்துங்கன்

(iv). (அ). கழங்காடுதல், சிற்றிலைக் கொண்டோடுதல்

(ஆ). கழங்கு ஆடுதல், சிற்றில் விளையாட்டு

(v). (அ). வங்கிசம்

(ஆ). மருதங்கிளி, ஏலங்கிராம்பு

(vi). (அ). பரதன்

(ஆ). அரசர்கள்

(vii). (அ). கழுவாத கால்

(ஆ). கற்றோர் / அறிஞர்

(viii). (அ). குளிர்ந்த பொய்கை / குளம்

(ஆ). அணைத்து

(ix). (அ). கண்ணகி

(ஆ). பாண்டிமாதேவி

(x). (அ). சமாதானம் உண்டாக

(ஆ). தருமன்

2. (i).

(அ). யானை போன்று நன்றாகப் பழகி இருந்தும் நன்றி மறந்து நடப்போரின் நட்பை விலக்க வேண்டும்.

(ஆ). நாய் போன்றவர்களின் நட்பை அதாவது எவ்வேளையிலும் நன்றி மறவாதவர்களின் நட்பை

(ii).

(அ). ‘‘கண்ணை மறைத்துக் கொண்டு போய் காட்டில் விடும் பூஞை‘‘

உவமானம் - பூஞை (காட்டில் விடுதல்)

உவமேயம் - பெண் (முன் பின் தெரியாதவனுக்குக் கொடுத்தல்)

பொதுத்தன்மை - அடிமைத்தனம்.

(ஆ) முன்பின் தெரியாதவனுக்குக் கட்டி கொடுப்பது.

மங்கையர்க்கு இக்கொடுமை புரிவது.

2. (iii). (அ). வண்டுகள் தேனுண்டு ரீங்காரம் செய்யும்

(ஆ). குளிர்ச்சி பொருந்திய நாடு

(iv). (அ). கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இறகில்லாத அம்பு - வாள் - தண்டு - சக்கரம் இவற்றிற்கு மேலாக தெய்வப் படைகளிலும் கை வைக்கும் அளவுக்கு ஓர் யுத்தகளம் போல் காட்சியளித்தது

(ஆ). பிறிற்றோவை அவர்களின் கட்சியினர் ஆகாசத்தில் கொண்டு போய் வைத்ததனால் இராமநாதனும் அவரது கட்சியினரும் சேர்ந்து போய் விட்டனர். விஸ்வநாத பிள்ளையும் நிலை தளர்ந்து விட்டார்.

(v). (அ). தமிழர் மரபின்படி தமிழ்பக்தியின் மொழி என்றும் இலக்கண இலக்கியங்களைப் படைத்ததன்படியும் கவரப்பட்டனர் என்பது தெளிவாகின்றது.

(ஆ). அழகிலும், ஆழத்திலும், பரப்பிலும், சிறந்த இலக்கியங்கள் தமிழில் காணப்படுவது போல் வேறெந்த இலக்கியங்களிலும் காணப்படுவதில்லை.

3.

(அ). விதியை நோதல், தம் நண்பரைத்தூற்றுதல், கோபம் கொண்டு நண்பரை நிந்தித்தல், சதிகள் செய்தல், பொய்ச்சாஸ்திரங்கள் கூறுதல், சாதகங்கள் புரட்டுதல், புலைநாத்திகம் பேசுதல், அழிவில்லாத நிறைவான ஆசையே நன்மையைத் தருமென அறிந்திடார்.

(ஆ). ஐம்பலன்களையும் அந்தக்கரணங்கள், உயிர் என்பவற்றை ஒன்றுபட்ட விருப்புடன் சேர்ந்து நிற்கும் போது நாம் விரும்பியதை அடைய முடியும்.

**அல்லது**

(அ)

* ஆரம்பகாலத்தில் புராண நாடகஙடகளே படமாக்கப்பட்டன.
* நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்தே அவை படமாக்கப்பட்டன.
* சென்னையிலிருந்த நாடகக்கம்பனிகள் கல்கத்தாவுக்கும், பம்பாய்க்கும் சென்று தங்கள் நாடகங்களையும் படமாக்கின.
* அன்மைக்காலம் வரை இயக்குனர்கள், நடிகர்கள், வசனகர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத்துறையிலிருந்து வந்தவர்கள் என்பது.
* பாத்திரங்களை ஏற்று நடிப்பவர் கமராவைப் பார்த்துப் பேசுதல், வசனத்தைப் பேசிவிட்டு பக்கவாட்டில் சென்று மறைதல், வசனத்தைக் கத்திப் பேசுதல், பின்னனி இசையானது பேசும் போது ஒலித்துக் கொண்டிருத்தல் ஆகியன.

(ஆ).

* சினிமாமொழி அமுத்தமாகப் பயன்பட்டிருத்தல் (காட்சிப்படிமம், ஒலி, படத்தொகுப்பு)
* பொருத்தமாக இழையோடும் மையக்கருத்தைக் கொண்டிருத்தல்
* காட்சிப் படிமங்களைப் பொருத்தமாக இணைத்தல்
* மையக்கருவைச் சாராத எதனையும் இணைக்காதிருத்தல்
* குறியீடுகள் போன்ற முறைகளால் வளப்படுத்தியிருத்தல்.

4. (அ).

- தலைவனை எண்ணி வாழ்ந்திருத்தல்
- தலைவனுடன் பெற்ற இன்பத்தை அவன் இல்லாத போதும் அவன் நினைவால் அனுபவித்தல்
- தலைவனின் நினைவில் வாழ்ந்தமையால் துன்பம் இன்றி இன்பம் பெற நேரிட்டதால் நன்றாக உண்டு, உறங்கியதால் உடல் மெலியவில்லை வளையல் கழரவில்லை

(ஆ).

- மகளிரோடு கைகோர்த்து விளையாடுதல்
- அவர் தழுவிய இடம் தழுவியும் அசைந்த இடம் அசைந்தும் விளையாடுதல்
- வண்டற் பாவைக்குப் பூவினைச் சூடிய பெண்களுடன் கைகோர்த்து விளையாடுதல்
- ஒழித்துச் செய்யும் செயலறியா வஞ்சனையற்ற இளைஞர்களுடன் கூடி உயர்ந்த கிளையில் இருந்துநீரினுள் குதித்தல்
- நீரின் அடிக்குள் சென்று மணல் அள்ளி வருதல்

5. (அ). வீரம் : கொங்கு தேசத்துவர்களைப் போரில் கொன்று தேவர்களின் தலைவனான இந்திரனின் தலைநகராகிய அமராபதியைப் பெற்றுக்கொடுத்தமை.

நாட்டுவளம் : பலாக்கனி, சங்குகள், இளநீர், நீர்வளம், வயல்வளம், உழவர்களின் அயராத உழைப்பு, குரங்குகள் என்பன அதிகமாகக் காணப்படும் நாடு.

(ஆ).

- மழை பொய்த்துப்போன கொடிய பஞ்சகாலத்திலும் தன்னை நாடி வருவோருக்கு கொடை கொடுப்பவர்.
- யார் தடுத்தாலும் “ நான் இருக்கிறேன்” என்று மார்பை நிமிர்த்தி நின்று கொடை வழங்குபவர்.
- தன்னிடம் மற்றவர் இரந்து வருமுன்னரே கொடை கொடுப்பவர்.
- கொடை வழங்கும் வரம் பெற்றவர்

6.

(அ).

- பக்குல் கத்தினால் அதை விரட்ட சிரட்டையில் நெருப்புத்தணழில் உப்புக் கற்களை இட்டு வெடிக்கச்செய்தல்
- பக்குல் கத்தினால் யாராவது இறப்பார் என நம்புதல்
- தலைப்பிள்ளைக்கான பிரசவத்தைக் கைராசிக்காரி ஒருவர் பார்த்தல்
- நாட்டு வைத்தியம் / வீட்டு வைத்தியம் பார்த்தல்
- நோய் ஏற்பட்டவரைக் காப்பாற்ற குர்ஆன் ஓதுதல், நேர்த்தி வைத்தல்

(ஆ).

- மூத்தம்மாவைப் போல் இளவரசனாக வலம் வர எண்ணுபவன்
- தன்னிடம் உள்ள பயந்தாங்கொள்ளிப் பட்டத்தை நீக்க முனைபவன்
- மூத்தம்மாவை ஓர் முடி சூடா இராணியாக கற்பனை செய்பவன்
- துணிவுடன் மஞ்சேனா மரத்தின் கீழ் இருக்க விரும்புபவன்
- மூத்திரம் முடுத்தால் இப்பவெல்லாம் தனியாகச் செல்லத்துணிபவன்

7.

(அ).

- அருவிகளின் ஆர்ப்பரிப்பு
- பறவைகளின் பேச்சோசை
- இலைகளின் சலசலப்பு
- குறிஞ்சிப் பூக்களின் நறுமணம்
- தேனிழைக்கும் காற்று
- வீடுகள் தோறும் மணக்கும் கள்
- புன்செய் நிலங்கள்
- வரகும், எள்ளும் நிறைந்து கிடப்பது

(ஆ).

- பறம்பு மலைநாட்டின் நேற்றைய நிலையும் இன்றைய நிலையும்
- பாரிமன்னனின் வீரம்
- பாரி மகளிரின் துயர்
- பறம்பு மலை நாட்டு மக்களின் வீரம்
- போரின் கொடூரம்
- பாரிமகளிர் வாழ்ந்த வாழ்க்கை